**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**SC.No. 2/2020**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. முருக கிருஷ்ணன்.** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நாகப்பன்** | **Calling** | : | |
| **Village** | : | **நடுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **35** |
| | | | **Dated** | : | **04.02.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1, A6, A7 present. A2, A3, A5 absent, petition filed and allowed. A4 died (CA).**

**Both side counsels present.**

பட்டியல் சாட்சி 4 **திரு. முருக கிருஷ்ணன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும், மற்ற எதிரிகளையும் தெரியும். அசா. 1 ஐ தெரியும். கடந்த 11.11.2013 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு முருகன்(A1) மற்றும் நாகராஜீக்கு(அசா.3) இடையே பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக அங்கு இருந்த எஸ்ஆர் டீக்கடை அருகே இருந்த ஒரு ஓட்டலில் சண்டை நடந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் அடித்து கொண்டனர். அதை நான் நேரில் பார்த்தேன். யார் யாரை அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் அவர்களை விலக்கிவிட்டேன். அது முடிந்த பிறகு பிரச்சனை மீண்டும் வந்து

விடக்கூடாது என்பதற்காக 6 பேர் சேர்ந்து புகார் கொடுக்க போனோம். என்னுடன் சுப்பிரமணி, செல்வராஜ், பால்பாண்டி, ஜெயச்சந்திரன், முருகன் ஆகியோர் வந்தனர். இரவு சுமார் 09.00 – 10.00 மணிக்குள் முருகன், சுப்பன் அவர்கள் தான் அடித்தார்கள். அவர்கள் மீது நாங்கள் புகார் கொடுத்துவிட்டு வந்து விட்டோம். அதன்பிறகு திரும்பி வந்தபோது பின்னால் வந்த பால்பாண்டியை ஒரு 7 பேர் சேர்ந்து அடித்துவிட்டதாக பால் பாண்டி சொன்னார். சுப்பன், பழனிச்சாமி, பெருமாள், வேல்முருகன், வெங்கடேஷ், நவநீதகிருஷ்ணன் ஆகியோர் கட்டை, கம்பு, குச்சி ஆகியவற்றால் அடித்ததாக சொன்னார்கள். அவருக்கு தலையில் காயம் இருந்தது. அந்த வழியே வந்த டாடா ஏசி வாகனத்தில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.04 18:01:08 +0530